# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 72/2022

Prosecution witness PW - 1

| | | |
|---|---|---|
| Name | …. | Eagambaram |
| Father's Name | .... | Varadan |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 05th day of August 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் பெரும்பாலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. நான் சொந்தவேலை காரணமாக சென்றபோது செய்யாறு காவல் நிலையத்தில் பார்வை மகஜரில் கையொப்பம் 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. ஆய்வாளர் காவல்நிலையத்தில் எழுதிய பேப்பரில் கையொப்பம் கேட்டார் போட்டேன். மற்றபடி வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு

விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.09.2021 அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு செய்யாறு டவுன் ஆரணிகூட்ரோடு பேருந்து நிறுத்தம் அருகில் சொந்த வேலையாக சென்றபோது அங்கு போலிஸ் உடையிலிருந்த போலிசார் என்னை வெம்பாக்கம் தாலுக்கா சிறுவஞ்சிபேட்டை சேர்ந்த ராமன் மகன் முருகன் என்பவரை அழைத்து 14.09.2021 ஆம் தேதி 1.45 மணிக்கு செய்யாறு வெங்கட்ராயன்பேட்டை சையத் காசிம் என்பவர் அரசால் தடைசெய்யப்பட்ட காட்டன் என்ற சூதாட்டம் விளையாடி கொண்டிருந்ததாகவும் அதை கிழிக்க சென்றபோது போலிசாரை அசிங்கமாக பேசி தடியால் அடிக்கவந்ததாகவும், இது சம்மந்தமாக வாக்கு பதிவு செய்து விசாரித்ததாகவும் எங்களை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைய சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதாகவும் அதனடிப்படையில் எங்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் போலிசாரிடம் வாக்குமூலத்தில் சொல்லவிட்டு எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 72/2022

Prosecution witness PW - 2

| | | |
|---|---|---|
| Name | …. | Karuna |
| Father's Name | .... | Pasupal |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 05th day of August 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் பெரும்பாலை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. நான் சொந்தவேலை காரணமாக சென்றபோது செய்யாறு காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.** 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ.**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்துக்கள் காவல் நிலையத்தில் ஆய்வாளர் தான் வாங்கினார். காவல் நிலையத்தில் தான்

கையொப்பம் செய்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.09.2021 அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு நானும் செய்யாறு பைங்கினர் கிராமத்தை சேர்ந்த சேகர், த/பெ. கண்ணன் என்பவரும் செய்யாறு டவுன் ஆரணிகூட்ரோடு பேருந்து நிறுத்தம் அருகில் சென்றபோது அங்கு போலிஸ் உடையில் இருந்த போலிசார் என்னை அழைத்து தான் செய்யாறு காவல் வட்ட ஆய்வாளர் என்றும் ஒருவரை காண்பித்து அவர் பெயர் சையத் காசிம் வயது 51, த/பெ சையத் குடு நேரு தெரு, வெங்கட்ராயன்பேட்டை செய்யாறு என்றும் அவர் அரசால் தடைசெய்யப்பட்ட காட்டன் என்னும் சூதாட்டம் விளையாடி கொண்டிருந்ததாகவும் அவரை பிடிக்க சென்றபோது போலிசாரை அசிங்கமாக பேசி தடியால் அடிக்க வந்ததாகவும் அது சம்மந்தமாக அவரை கைது செய்து இருப்பதாக கூறி அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார். நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்ளவே எங்கள் இருவர் முன் மேற்படி சையத் காசிம் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை செய்யாறு ஆய்வாளர் அவர்கள் மதியம் 14.00 முதல் 15.00 மணிவரை பதிவு செய்துகொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் சையத் காசிம் என்பவரிடம் காட்டன் சூதாட்டம் ஆட பயன்படுத்திய நெம்பர்கள் எழுதிய துண்டு சீட்டு ஒன்று, பணம் ரூ.630 மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களை அடிக்க பயன்படுத்திய உருட்டு கட்டை ஆகியவை எங்கள் இருவரின் முன்னிலையில் செய்யாறு வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என

சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 72/2022

Prosecution witness PW - 3

| | | |
|---|---|---|
| Name | …. | Sekar |
| Father's Name | .... | Kannan |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 05th day of August 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் பைங்கினர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னிடம் இரண்டு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். ஒன்றும் பிரச்சனை யில்லை கையெழுத்து போடுமாறு சொன்னார்கள். அதனால் போட்டேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து **அ.த.சா.ஆ.**5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்துக்கள் காவல் நிலையத்தில் ஆய்வாளர் தான் வாங்கினார். காவல்

நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.09.2021 அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு நானும் பெரும்பாலை கிராமத்தை சேர்ந்த கருணா என்பவரும் செய்யாறு டவுன் ஆரணிகூட்ரோடு பேருந்து நிறுத்தம் அருகில் சென்றபோது அங்கு போலிஸ் உடையில் இருந்த போலிசார் என்னை அழைத்து தான் செய்யாறு காவல் வட்ட ஆய்வாளர் என்றும் ஒருவரை காண்பித்து அவர் பெயர் சையத் காசிம் வயது 51, த/பெ சையத் குடு நேரு தெரு, வெங்கட்ராயன்பேட்டை செய்யாறு என்றும் அவர் அரசால் தடைசெய்யப்பட்ட காட்டன் என்னும் சூதாட்டம் விளையாடி கொண்டிருந்ததாகவும் அவரை பிடிக்க சென்றபோது போலிசாரை அசிங்கமாக பேசி தடியால் அடிக்க வந்ததாகவும் அது சம்மந்தமாக அவரை கைது செய்து இருப்பதாக கூறி அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார். நாங்கள் இருவரும் ஒப்புக்கொள்ளவே எங்கள் இருவர் முன் மேற்படி சையத் காசிம் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை செய்யாறு ஆய்வாளர் அவர்கள் மதியம் 14.00 முதல் 15.00 மணிவரை பதிவு செய்துகொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் சையத் காசிம் என்பவரிடம் காட்டன் சூதாட்டம் ஆட பயன்படுத்திய நெம்பர்கள் எழுதிய துண்டு சீட்டு ஒன்று, பணம் ரூ.630 மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களை அடிக்க பயன்படுத்திய உருட்டு கட்டை ஆகியவை எங்கள் இருவரின் முன்னிலையில் செய்யாறு வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என

சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 190/2019

Prosecution witness PW - 9

| | | |
|---|---|---|
| Name | …. | Jegan |
| Father's Name | .... | Shanmugam |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 05th day of August 2025.

( எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் அனக்காவூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. 2018 ஆம் ஆண்டு சம்பவம் நடந்தது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் டிப்ளமோ படித்திருக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் தகப்பனார் மளிகை கடை வைத்திருக்கிறார். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு

விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அனக்காவூர் கிராமம் நடுத்தெருவில் வசித்து வருவதாகவும், என் அப்பா மளிகை கடை நடத்திவருவதாகவும் கடந்த 12.04.2012 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு நானும் என் ஊரை சேர்ந்த ராஜேந்திரன் மகன் தமிழ்செல்வன் என்பவரும் தனியார் கம்பெனியில் வேலைக்கு செல்ல நன்னடத்தை சான்று வாங்கவேண்டி அனக்காவூர் காவல்நிலையம் வந்தபோது காவல் நிலைய குற்ற எண். 105/2018 சட்டப்பிரிவு 294பி மற்றும் 307 இ.த.சா. வழக்கில் எதிரி தேவராஜ் மகன் பிரவீன் எனபவர் மேற்படி பிரவீன் என்பவர் எந்தவித துன்புறுத்தல் மற்றும் வற்புறுத்தல் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னையும் மற்றும் தமிழச்செல்வன் என்பவரையும் சாட்சியாக விசாரித்து எங்கள் இருவர் முன்னிலையில் பிரவீன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அப்போது திருவத்திபுரம் செய்யாறு பாலம் அருகே டோல்கேட் பின்புறம் பச்சையம்மாளை அடித்த இரும்பு கம்பியை காலை 11.45 மணிக்கு எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றும் அவ்வாறு எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்து சம்மந்தமாக தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் தமிழ்செல்வனும் கையொப்பமிட்டுவிட்டு போலிஸ் விசாரணையில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எழுதாத பேப்பரில் தான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன் தற்போது என்னிடம் காண்பிக்கபடும் கையெழுத்து நான் போட்டது தான் என்றால் சரிதான்.